**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 350/2022 P.W. 3/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. லாரான்ஸ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ஞானமுத்து | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். 3ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை .மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது கீரிப்பாறை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கொற்றிக்கோடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது 21.02.2021 காலை 08.30 மணியளவில் சாண்டம் ரிகிரியேசன் கிளப்பில் ரகசியமாக மது விற்பதாக கிடைத்த தகவலின் பேரில் கொற்றிகோடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. வல்சலாம் அவருடன் நானும் தலைமை காவலர் திரு. கனகராஜ் 527 மற்றும் திரு. பாலமுருகன் 1303 ஆகியோர் 09.30 மணியளவில் சம்பவ இடம் சென்று அந்த பாரின் உரிமம் எண் FL 2 12/19 அங்கு சென்று விசாரிக்கும் போது பின்னர் பெயர் கேட்டு தெரிந்த 1. ஐயப்பன்பிள்ளை மகன் ஆனந்த், 2. முருகன், 3. பால்தாஸ் ஆகிய மூவரும் அரசு அனுமதிக்கப்பட்ட விதிகளை மீறி காலை 06.00 மணிக்கு அதிக லாபம் சம்பதிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மது விற்பனை செய்து கொண்டிருந்தனர்.

41 விதமான வெவ்வேறு பிரான்டுகளில் உள்ள மது பானங்களை விற்றுக் கொண்டிருந்தனர். ஆண்டுகளன் ஆனதால் அந்த பிரான்டுகளின் பெயர்கள் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. மொத்தம் 263 லிட்டர் 490 மிலி அளவு கொண்ட 1150 பாட்டில்களையும், மது விற்பனை செய்து வைத்திருந்த பணம் ரூ. 31,810/—யும்

அத்தாட்சியில் கைப்பற்றி வெளிநபர்கள் யாரும் அத்தாட்சியில் சாட்சிகளாக கையொப்பம் செய்ய முன் வராததால் போலீசார் ஆகிய நாங்களே அத்தாட்சியில் சாட்சிகளாக கையொப்பம் செய்து கைப்பற்றினோம்.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த அத்தாட்சி ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அங்கிருந்த எதிரிகளுக்கு பிரிவு 41ஏ, குவிமுசன் கீழ் அழைப்பாணை வழங்கி விசாரணைக்கு ஆஜராக உத்தரவிட்டு கைப்பற்றிய பொருட்களை காலை 10.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண். 11/2021ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் எங்களை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வளார் என்னை எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் தேதி, நேரம் ஞாபகம் இல்லை, எங்கு வைத்து விசாரித்தார் என்றால் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்காததால் தான் எந்த தேதி , எந்த நேரம் என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வளார் என்னை விசாரிக்கும் போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் என்னுடன் சேர்ந்து 3 காவலர்கள் இருந்தார்கள்.

11.00 மணிக்கு மேல் தான் சச்சின் ரிகிரியேசன் கிளப் சென்றேன் என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சச்சின் ரிகிரியேசன் கிளப் சென்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஞாபகமில்லை. நான் பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளதால் தான் ஞாபகமில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கு பதிவு செய்து அதற்கு உறுதுணையாக இருந்ததால் தான் அங்கிருந்த பொதுமக்கள் யாரும் சாட்சிகளாக முன்வரவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் செல்லும் போது அங்கு பொதுமக்கள் யாரும் இல்லை.

அந்த கிளப்பிற்கு பக்கத்தில் பார் உள்ளது என்றால் ஆமாம். அந்த பாரின் முன்பு குடித்துவிட்டு வாகனத்தை ஓட்டி வரும் வாகனங்களை அடிக்கடி பிடிப்போம் என்றால் இல்லை. பாரின் முன்பு குடித்துவிட்டு வாகனத்தை ஓட்டி வரும் வாகனங்களை நாங்கள் பிடிப்பதால் பாரின் உரிமையாளர் வியாபாரம் பாதிக்கப்படுகிறது என்று சொல்ி

எங்களிடம் கேட்டதால் அந்த முன் விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு பொயயாக இந்த வழக்கை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அரசு விதிகளுக்கு உட்பட்டு தான் மதுபானங்களை விற்றார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Padmanabhauram.